

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ.விஜயகுமார் எம்.பி. அவர்கள், 230 பேருக்கு ரூ.2 கோடியே 10 இலட்சம் சிறு, குறு விவசாய கடன் தள்ளுபடிக்கான சான்றிதழ்கள் மற்றும் ரூ.32 இலட்சம் மதிப்பிலான புதிய கடன்களை கடுக்கரை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் இன்று (19.09.2016) வழங்கினார்.

செ.வெ.எண்: 646/2016 நாள்: 19.09.2016

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ.விஜயகுமார் எம்.பி. அவர்கள், 230 பேருக்கு ரூ.2 கோடியே 10 இலட்சம் சிறு, குறு விவசாய கடன் தள்ளுபடிக்கான சான்றிதழ்கள் மற்றும் ரூ.32 இலட்சம் மதிப்பிலான புதிய கடன்களை இன்று (19.09.2016) வழங்கினார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ.விஜயகுமார் எம்.பி. அவர்கள், 230 பேருக்கு ரூ.2 கோடியே 10 இலட்சம் சிறு, குறு விவசாய கடன் தள்ளுபடிக்கான சான்றிதழ்கள் மற்றும் ரூ.32 இலட்சம் மதிப்பிலான புதிய கடன்களை கடுக்கரை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் இன்று (19.09.2016) வழங்கி தெரிவித்ததாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், ஆறாவது முறையாக தமிழ்நாடு முதலமைச்சராக பதவியேற்றவுடன், விவசாயிகள் மற்றும் பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டும் என்ற நோக்கத்தோடு, முதலில் ஐந்து முக்கிய திட்டங்களில் கையெழுத்திட்டார்கள். குறிப்பாக சிறு, குறு விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய நிலுவையிலுள்ள விவசாயக் கடன் தள்ளுபடி செய்தும், திருமாங்கல்யத்திற்கு 4 கிராம் தங்கம் வழங்கும் திட்டத்தை, மீண்டும் உயர்த்தி 8 கிராம் தங்கமாகவும், கர்ப்ப காலத்தில் அரசு பெண் ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ஆறுமாத கால விடுமுறையை மீண்டும் உயர்த்தி ஒன்பது மாதமாகவும், கர்ப்பிணி பெண்களின் மனம் குளிர செய்கின்ற வகையில் சமுதாய வளைகாப்பு சீர்வரிசை பொருட்கள், பிறந்த குழந்தைகளுக்கு தேவைப்படும் 16 பொருட்கள் உள்ளடங்கிய அம்மா குழந்தைகள் நல பரிசு பெட்டகம், பயணத்தில் இருக்கும்போது தாய்மார்கள் தங்களது பச்சிளங்குழந்தைகளுக்கு தாய்பால் ஊட்ட பேருந்து நிலையங்களில் பாலூட்டும் அறைகள் போன்ற பல்வேறு திட்டங்கள் இதுவரை இந்தியாவிலே எந்த ஒரு முதலமைச்சரும் அறிவிக்காத திட்டங்களை அறிவித்து, அதனை பொதுமக்கள் முழுமையாக பெற்று பயனடைய செய்கின்ற ஒரே முதலமைச்சர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா மட்டும்தான்.

இதற்கு முன்பாக மறவன்குடியிருப்பு, தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 221 சிறு, குறு விவசாயிகளின் அசல், வட்டி, அபராத வட்டி, இதர செலவினங்கள் என மொத்தம் ரூ. 219.43 இலட்சம் அளவிற்கு கடன்களை தள்ளுபடி செய்து, அதற்கான சான்றிதழ்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் கடுக்கரை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 230 விவசாயிகளுக்கு ரூ. 2 கோடியே 10 இலட்சம் சிறு, குறு விவசாய கடன் தள்ளுபடி செய்து, அதற்கான சான்றிதழ்களும், ஒரு குழுவுக்கு ரூ. 7 இலட்சமும், 25 குழுக்களுக்கு தலா ரூ. ஒரு இலட்சம் என மொத்தம் ரூ. 32 இலட்சத்திற்கு விவசாய கடனுக்கான காசோலைகள் இன்று வழங்கப்பட்டது. இதுபோன்ற மக்களின் திட்டங்களை அறிவித்து, மக்களுக்காகவே வாழ்ந்து கொண்டிருக்கும் அம்மா அவர்கள், யாரை வேட்பாளராக அறிவிப்பார்களோ, அவர்களை வெற்றிபெற செய்ய நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டும் என பேசினார்.

நிகழ்ச்சியில் துணை பதிவாளர்கள் திரு. பொ. நடுக்காட்டு ராஜா, திருமதி. பிரியதர்ஷினி, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் திரு. தாணுபிள்ளை, கடுக்கரை தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தின் தலைவர் திரு. ற்றி. ஐயப்பன், கடுக்கரை ஊராட்சித்தலைவர் திரு. வள்ளிநாயகம், திடல் ஊராட்சி தலைவர் திரு. பொன்ராஜ், காட்டுப்புதூர் ஊராட்சித்தலைவர் திரு. பி. பொன் காமராஜ் பாக்கியநாத், செயலாளர் திரு. சி.பகவதி பெருமாள்பிள்ளை, தோவாளை ஒன்றிய கவுன்சிலர் திரு. ரெங்க கிருஷ்ணன், திரு. கனகராஜன், திரு. பார்த்திபன், திரு. மகாராஜன், திரு. கிஷோர், திரு. காமராஜ், திரு. ராபீன்சென், திரு. எஸ்.ஆர். சுப்பிரமணியன், திரு. பெருமாள், திரு. ஜெகதீஷ் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.